Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALANGAIMAN

Calendar Case No.**STC.50/2022**

Miscellaneous

Preliminary Register

Deposition of PW-1 /

| Name | : | மதனகோபால் | Father Name | : | பாஸ்டின் |
|---|---|---|---|---|---|
| Village | : | செம்மங்குடி | Taluk | : | |
| Caste | : | | Calling | : | CRC Driver (Rtd.) |
| Religion | : | | Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of October 2023.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,

**குறுக்கு விசாரணை**

**1.** நான் கொடுத்த புகார் மனு, வழக்கறிஞர் அறிவுப்பு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எதிரி எனது குடும்ப நண்பர் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த வகையில் குடும்ப நண்பர் என்றால் எனது நண்பர் அதனால் குடும்ப நண்பர் என்று சொன்னேன். எனது அப்பாவும், அவரது அப்பாவும் குடும்ப நண்பர் இல்லை. எனது மனைவியும் அவரது மனைவியும் குடும்ப நண்பர் இல்லை, எனது மகனும் அவரது மகனும் குடும்ப நண்பர் இல்லை. நண்பர் மட்டும் தான் குடும்ப நண்பர் இல்லை. பூந்தோட்ட கிராமம் மேலத்தெருவைச் சேர்ந்த சண்முகம் மகன் ரமேஷ், கருப்பன் மகன் சின்னையன் அவர்கள் இருவரும் எனக்கும் ஆஜர் எதிரிக்கும் நண்பர் என்றால் சரிதான்.

2. ரூ.3,65,000/- பணத்தை நான் ஒரே நாளில் ஆஜர் எதிரியிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். ஒரே நாளில் ரூ.3,65,000/-கொடுத்தேன் என்பது தவறு. ரூ.3,00,000/- ஒரே நாளிலும், ரூ.65,000/- சில்லரையாகவும் வேறு ஒரு நாள் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் காசோலையில் மதனகோபால் என்பது யாரால் எழுதப்பட்டது என்றால் எதிரிதான் எழுதினார். எதிரி எழுதினார் என்று கூறியது தவறு காசோலையில் உள்ள மற்ற விபரங்கள் வேறு

கையெழுத்தால் எழுதப்பட்டதா என்றால் மதனகோபால் என்ற பெயரில் எதிரியால் எழுதப்பட்டது என்று கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல.

3. பணம் கொடுத்த விபரம் யார் யாருக்கு தெரியும் என்றால் ரமேஷ் மற்றும் சின்னையன் ஆகியோருக்கு தெரியும். பணம் கொடுத்த போது ரமேஷ் மற்றும் சின்னையன் ஆகியோர் இருந்த விபரத்தை நான் எனது புகார் மனுவில் வழக்கறிஞர் அறிவிப்பிலும், நிரூபண வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல. ரூ.3,65,000/- எவ்வாறு கொடுத்தேன் என்றால் 500/- ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தேன். எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 15.02.2022 ம் தேதி கொடுத்தேன். Reserve Bank of India உத்தரவின்படி 2,00,000/- ரூபாய்க்கு மேல் பணவரவு செலவு செய்ய வேண்டும் என்றால் வங்கிகணக்கு மூலமாகத்தான் கொடுக்க வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. Reserve Bank of India சட்ட விதிமுறைகளுக்கு மாறாக செயல்படுகிறேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் ரூ.3,65,000/- கொடுக்கும் போது வட்டி ஏதும் பேசப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

எதிர் மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.